**தலைப்பு 192 – சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015**

---

தலைப்பு 192 – சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 06 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.1 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 7,620.78 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 7,270.16 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 350.62 மில்லியன் அதாவது 4.60 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 6,640.85 | 6,566.02 | 74.83 | 1.13 |
| மூலதனம் | 979.93 | 704.14 | 275.79 | 28.14 |
| மொத்தம் | **7,620.78** | **7,270.16** | **350.62** | **4.60** |

## 2.2 முற்பணக் கணக்கு

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 19201 ஆம் இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 20.00 | 0.98 | 10.50 | 11.40 | 618.00 | 167.73 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கீழான 6000/0000/00/0016/0087/000 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53.17 மில்லியனாக இருந்தன.

2.4 **கணக்காய்வு அவதானிப்புக்கள்**

அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற ஒதுக்கீட்டு நியம செலவினப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் ஏனைய சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ஆ) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (இ) | ஒதுக்கீட்டு நியம செலவினப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 447 |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 5 மூலதன செலவின விடயங்களுக்கும் 2 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் ஒதுக்கப்பட்ட ரூபா 4.35 மில்லியன் தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 21 செலவின விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 10 சதவீதத்திற்கும் 96 சத வீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

19201 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,335,319 ஆக இருந்தது. அந் நிலுவை மீதிகள் 01 வருடம் மாதங்கள் முதல் 03 வருடங்கள்

வரையான காலவீச்சில் இருந்து வந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.4 செயலாற்றல்

இந்த அமைச்சு 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 04 சந்தர்ப்பங்களின் கீழ் உரிய கடமைப் பொறுப்புக்கள் திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன், ஒட்டுமொத்தமாக அமைச்சின் நோக்கங்கள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய செயலாற்றல் கீழே காட்டப்பட்டுள்ளது.

| நோக்கங்கள் | நோக்கங்களை அடைந்துகொள்ளல் |
|---|---|
| • சகல பிரஜைகளுக்கும் அச்சமும் பயமுமின்றி வாழக்கூடிய சமாதான சுற்றுச் சூழலொன்றை பேணிச் செல்வதற்காக பாகுபாடின்றி சட்டத்தை அமுல்ப்படுத்தல்.<br>• பல்வேறு குற்றங்கள் சமூக விரோத செயற்பாடுகள் மற்றும் வன்முறைகளை தவிர்ப்பதும் குறைப்பதும் அத்துடன் பல்வேறு குற்றங்கள் சமூக விரோத செயற்பாடுகள் மற்றும் வன்முறைகளை செய்பவர்களை சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வருவதினூடாக சமூகத்தில் சமாதான சூழலொன்றை உருவாக்குதல். | நாட்டில் அறிக்கையிடப்படும் குற்றங்களை தீர்ப்பதற்கு தேவையான கொள்கை ரீதியான மற்றும் தந்திரோபாய வழிகாட்டலின் பேரில் 2013 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 1,172,793 ஆன குற்றங்களின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டின் போது 1,180,805 வரை அதிகரித்திருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் போது அது 1,129,555 வரை குறைவடைந்திருந்தது. அவ்வாறே சிறுவர்களுக்கு எதிராக அறிக்கையிட்ட குற்றங்ககள் உட்பட பெண்களுக்கு எதிராக அறிக்கையிடப்பட்ட குற்றங்களைப் பார்க்கும் போது 2013 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 14,360 ஆக இருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது 14,302 ஆக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 14,199 வரை குறைவடைந்திருந்தது. |

### 3.5 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்ட ரூபா 2,895,986 தொகையான 22 நட்ட உருப்படிகள் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்ப மீதிகளாக முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன், மீண்டும் மீளாய்வாண்டின் போது பதிவழித்தல்களாக கணக்குகளில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 143 உருப்படிகளுக்கு இடம்பெற்றிருந்த நட்டங்களின் பெறுமதி ரூபா 28,407,203 ஆக இருந்தது. அந்நடங்கள் 5 ஆண்டுகள் முதல் 10 வருடங்கள் காலப்பகுதியிலிருந்து இருந்து வந்த போதிலும், அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய தரப்பினர்களிடமிருந்து அந்நட்டத்தை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 17 | 16 | 01 | |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 65 | 85 | - | 20 |
| (iv) | ஆரம்ப நிலை | 34 | 29 | 05 | - |
| | மொத்தம் | 121 | 132 | 09 | 20 |